S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
பரிசோதித்து சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

மலர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 05 வெள்ளிக்கிழமை [20-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 24

# தொண்டாவின் யோசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்பு

## ஏனைய கட்சிகளும் ஆதரவுதர வேண்டும் என்கிறார் அஷ்ரப்

கொழும்பு, டிசம்பர் 20

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைச்சர் தொண்டமான் வெளியிட்டிருக்கும் யோசனைக்கு முஸ்லிம் காங்கிரஸ் முழு ஆதரவு தெரிவித்திருக்கிறது.

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்திலும் விட இந்த யோசனை சிறந்தது என்றும்—

இந்த யோசனைக்கு ஆதரவு தர சகல கட்சிகளும் முன்வரவேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

"இலங்கை — இந்திய ஒப்பந்தம் வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் அபிலாஷைகளை ஒரு நல்ல சமநிலையில் நிறுத்தி அணுகுவதாகக் காணப்படவில்லை. ஆனால் தொண்டாவின் யோசனை இம் மூன்று இன மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் விருப்பு, வெறுப்புகளைக் கவனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு—கிழக்கில் வாழும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சமாதான முயற்சியில் தனித்து சுதந்திரமாகவே செயற்படுகிறேன்

### அமைச்சர் தொண்டமான் சொல்கிறார்

கொழும்பு, டிச. 20

"சுதந்திரமான மனிதனாகவே நான் சமாதான முயற்சியில் இறங்கியுள்ளேன். சமாதானம் வேண்டும் என்று வெறுமனே விரும்புவது போதாது. யாரோ ஒருவர் அது தொடர்பான முயற்சியை ஆரம்பிக்க வேண்டும். இந்த அறிவு தரும் யுத்தத்தினால் மக்கள் அனைவரும் களைத்துவிட்டனர்."

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் தொண்டமான்.

தெரிவுக்குழுவுக்குத் தாம் சமர்ப்பித்த யோசனையை வெளியிட்டு கடந்த வாரம் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரஸ்தாப செய்தியாளர் மாநாட்டில் அவர் தெரிவித்த மேலதிக கருத்துக்கள் வருமாறு:-

எனது யோசனைகளுக்கு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது எதிர்க்கட்சியிலிருந்தோ எதிர்பார்க்கப்படும் ஆதரவு கிடைக்காமல் இருப்பினும் கூட, தைப் பொங்கலுக்குப் பின்னர் நான் நிச்சயம் யாழ்ப்பாணம் செல்வேன்.

இந்த யோசனைகளுடன் நான் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளைச் சந்திப்பேன். நான் முதலில் மாத்தயா மற்றும் ஏனையோருடன் பேசலாம். ஆனால் எனது யோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனின் அங்கீகாரம் கிடைப்பதை நான்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பிரேமா உத்தரவிடும் வரை தாக்குதல் தொடரும்!

### தளகர்த்தர் வணசிங்க தகவல்

கொழும்பு, டிச. 20

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ உத்தரவிடும் வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று கூட்டுப் படைகளின் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் இடம்பெறவிருக்கும் தொண்டமானின் உத்தேச சமாதானப் பேச்சுகளுக்கு இடமளிக்குமுகமாக படையினர் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வார்களா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

"நாம் சமாதானத்தையே எதிர்பார்த்து ஏங்குகின்றோம். ஆனால் — சண்டை நிறுத்தத்திற்குரிய நேரம் வந்துவிட்டது என்று அரசியல் தலைவர்கள் நினைக்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்" — என்றார் ஜெனரல் வணசிங்க.

(ஒ-எ-3)

முச்சந்தி முரளி



அப்ப... இனி பதுக்க விடாமல் பார்த்துக் கொள்ள வேணும் என்கிறியளோ...

## லலித் கட்சியின் பெயருக்கு ஐ.தே.க. தரப்பில் ஆட்சேபம்

கொழும்பு, டிச. 20

முன்னாள் அமைச்சர்கள் லலித் - காமினி ஆகியோர் ஆரம்பித்துள்ள புதிய அரசியல் கட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் சிறிசேனகுரே தேர்தல் ஆணையாளரிடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறார்.

புதிய கட்சிக்கு ஐக்கிய தேசிய ஜனநாயக கட்சி அல்லது ஜனநாயக ஐக்கிய பெயர் வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும்—

இப்பெயர்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெயரை ஒத்திருப்பதாகவும்—

ஆகவே ஐ.தே.க.வின் முன்னாள் எம்.பிக்கள் பலர் அங்கத்துவம் வகிக்கும் புதிய கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு அங்கீகாரம் வழங்கக்கூடாது என்றும் திரு. சிறிசேனகுரே தேர்தல் ஆணையாளரைக்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் மூலம் உணவு; திட்டம் புத்துயிர் பெறுகிறது

### செஞ்சிலுவை அதிகாரி பலாலிக்கு

யாழ்ப்பாணம், டிச. 20

காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை அனுப்பும் திட்டம் புத்துயிர் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான பேச்சுக்களை மீண்டும் நடத்துவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி, எதிர்வரும் திங்கட்கிழமை பலாலிக்குச் செல்லவிருக்கிறார்.

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைத் துறையில் — கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் பெரும் சிரமத்தின் மத்தியில் நடை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பொருள்கள் இறக்கும் பணி: செஞ்சிலுவை அதிகாரியிடம் தொழிலாளர் பட்டியல்!

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் 47 பேரின் பெயர், விபரங்கள் யாழ். செயலகத்தால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

விரைவில் மற்றுமொரு பட்டியல் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பட்டியல்களையும் எடுத்துக்கொண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி, பலாலிக்குச் சென்று படை அதிகாரிகளுடன் ஆராயவுள்ளார். (ஓ-5)

## நாளை முதல் ம. எண்ணை ஒரு லீற்றர் 38 ரூபா!

### அரச அதிபர் விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். மாவட்டத்தில் மண்ணெண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. லீற்றர் ஒன்றுக்கான உச்ச விலை 38 ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை முதல் இந்தப் புதிய விலை அமுலுக்கு வருவதாக யாழ். அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய்க்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக யாழ். செயலகத்தில் நேற்றுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அரச அதிபர் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் செயலக அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், உத்தரவுபெற்ற மண்ணெண்ணெய் விநியோகஸ்தர்கள், வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலையில் மண்ணெண்ணெயை விற்பனை செய்ய உத்தரவு பெற்ற வியாபாரிகளும், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் சம்மதம் தெரிவித்துள்ளனர். (ஒ 5)

## ஊவா மாகாணத்தில் தமிழர் மத்தியில் பதற்றம்

கொழும்பு, டிச. 20

ஊவா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு வருகின்றனர்; குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் மறியல், திடீரென கைது செய்யப்படுகின்றனர்.

இதனால் ஊவாவில் தமிழர்கள் மத்தியில் பெரும் பதற்றமும், பீதியும் நிலவுகின்றன.

பதுளை, பசறை, லுணுகலை, பண்டாரவளை போன்ற பகுதிகளுக்குச் சென்ற தமிழ் இளைஞர்கள் பெரிதும் அஞ்சுகின்றனர் என்று தொழிற் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஜே. வி. பியினர் அப்பகுதிகளில் பலரது அடையாள அட்டைகளைப் பறித்தெடுத்து விட்டதால், சம்பந்தப்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-த)

## யாழ். பல்கலைக் கழக அனுமதி இங்கேயே விண்ணப்பிக்கலாம்

### உப வேந்தர் துரைராஜா தகவல்

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1991-92 ஆம் கல்வி ஆண்டுக்குரிய அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை இங்கேயே பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

1991-92 கல்வி ஆண்டில் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்த

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி பகுதியில் நேற்று 8 படையினர் உயிரிழப்பு

பலாலி முகாம் பகுதிகளில் நேற்று விடுதலைப் புலிகள் பல தடவைகள் அதிரடித் தாக்குதல்கள் நடத்தினர். எட்டுப் படையினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பத்தமேனிப் பகுதியில் காவல் கடமையில் இருந்த படையினர் மீது நேற்றுக் காலை 9.45 மணியளவில் நடத்திய தாக்குதலில் 5 பேர் பலியாகினர் என்றும்—

இடைக்காடுப் பகுதியில் காவலரணில் நின்றுகொண்டிருந்த சிப்பாய்கள் மீது பகல் 11.45 மணியளவில் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் இருவரும், மீண்டும் பத்தமேனிப் பகுதியில் பிற்பகல் ஒரு மணியளவில் நடத்த தாக்குதலில் மேலும் ஒரு சிப்பாயும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பலாலி முகாம் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல்களில் — இந்த வாரத்தில் மட்டும், 27 படையினர் பலியாகியுள்ளனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## புலிகளுக்கு ஆயுத விநியோகம்: பிரேமாவை சர்ச்சைக்கு மீண்டும் இழுக்கிறார் லலித்!

கொழும்பு, டிச. 20

விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா ஆயுதங்கள் வழங்கியதை நிரூபிப்பதற்கான தகுந்த ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

இரகசியமாக ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாக இராணுவ அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியின் ஒலிப்பதிவு நாடா, தம்மிடம் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

அந்த அதிகாரி தற்சமயம் தலைமறைவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நாளை கொழும்புக்கு வரவிருக்கும் வேளையில் லலித் இந்த அறிவிப்பை வெளியிட்டிருப்பது ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

## ரஞ்சனுக்கு நஞ்சூட்ட முயன்ற இராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பு, டிச. 20

முன்னாள் பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பதவியில் இருந்தபோது அவரை நஞ்சூட்டி கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீலங்கா இராணுவப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த "லான்ஸ் கோப்ரல்" ஒருவரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவசர வேளையில்தான் தொடர்பு கொள்ள வேண்டிய முக்கிய நபர்களின் பட்டியல் ஒன்றை ஜே. வி. பி. சந்தேக நபர் ஒருவர் வைத்திருந்தார் என்றும்—

அவர் பிடிபட்டதை அடுத்தே மேற்படி 'லான்ஸ் கோப்ரல்' கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீர கைது செய்யப்பட்டதை ஒட்டி இராணுவ உயரதிகாரிகளுக்கு ஹோட்டல் ஒபரோயில் நடத்தப்பட்ட வரவேற்பின் போது—

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் மோதல்

வவுனியா மாவட்டம் வேப்பங்குளம் கூமாங்குளம் முகாம் இராணுவத்தினர் நேற்று முந்தினம் தாக்குதல்களை நடத்தியவாறு முன்னேறி வந்தனர்.

அவர்களை இடைமறித்து மடக்கிய புலிகள், அவர்கள் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

அதை அடுத்து இராணுவத்தினர் இழப்புக்களுடன் முகாம் திரும்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் இரண்டாவது லெப்டினன்ட் குஞ்சன் (சின்னராசா அருந்தவராசா—வவுனியா) வீரமரணமடைந்தார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தரமான சோழிநீரின் விற்பனைக்குண்டு. லீற்றர் 23/- மட்டுமே. சிவாமில், 4ம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (19085)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

மில்க்வைற் திரவ சவர்க்காரம் இப்போது விலை குறைவானது. தீவிரமாகச் செயற்பட்டு அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மை தருகிறது. வெயிலுடன் கூடிய வெற்றுப் போத்தல் தந்து விலையில் ரூ. 2/- கழிவு பெறுங்கள். விலை ரூபா 50/-.
(சி/1125)

### தமிழ் - ரைப்ரைட்டர்

தமிழ் (புதிய விசைப் பலகை) ரைட்ரைட்டர் மற்றும் ஆங்கில Standard - Portables ரைட்ரைட்டர்கள் விற்பனைக்கு உண்டு. Fudo, 39/17, மின்சார நிலைய வீதி. 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஷ்றா அருகாமையில்) (சி/1213)

---

## 'A' LEVEL CENTRE

உயர் தராதர கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி,
I ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

93 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்:
21 12 - 1991
சனி 6-15

தாவரவியல் - திரு. சிவவீரசிங்கம் B Sc.
விலங்கியல் - திரு தம்பிராஜா B Sc
பௌதிகவியல் - திரு சௌந்தி B. Sc.
இரசாயனவியல் - திரு. நாகரட்ணம் B Sc
தூய/பிரயோக கணிதம் - திரு. கணேசன் B. Sc.
(சி-1201)

---

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

## A/L-93 கலை, வர்த்தக வகுப்புக்கள்

எமது தனித்துவமான "SUPER GRADE" ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| பொருளியல் | ... | உதயன் |
| வர்த் நிதியும் | ... | தேவா |
| கணக்கியல் | ... | ராஜன் |
| அளவையியல் | ... | S.S. மனோகரன் |
| தமிழ், இந்துநாகரிகம் | ... | பாலா |
| புவியியல் | ... | இக்னேசியஸ் |

**ஆரம்பம்: 21-12-1991** சனிக்கிழமை 8-00 a m.

2 ஆவது பிரிவு *'Spoken English*
By Mr. M. A. HARI
ஆரம்பம்: 23 - 12 - 1991 Mon. 9 00 a. m.
(சி-1129)

---

# ஜனவரியில் பரீட்சை?

யாழ்ப்பாணம், டிச. 20

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் கடந்த மூன்று வருடப் பரீட்சைகள் ஜனவரியில் நடத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கொழும்பில் பரீட்சை ஆணையாளருடன் நடத்திய பேச்சுக்களில் இந்த இணக்க நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(ஒ-3)

# பட்ஜெட் நிறைவேறியது

1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் குழுநிலை விவாதத்தின் பின் பாராளுமன்றத்தினால் 57 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

124 எம்.பிக்கள் ஆதரவாகவும் 67 எம்.பிக்கள் எதிராகவும் வாக்களித்தனர்.
(ஒ எ)

# தடுப்பு முகாம்களில் 5,433 பேர் உள்ளனர்

தற்போது நாட்டின் பல்வேறு பகுதி விலுமுள்ள தடுப்பு முகாம்களில் 4036 பேரும் பொலிஸ் நிலையங்களில் 548 பேரும் சிறைச்சாலைகளில் 849 பேரும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பிரதமரும், நிதியமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதில் பூசாவில் 1840 பேரும், பலவத்தை முகாமில் 1075 பேரும், பல்லேகலையில் 648 பேரும், தெலவலயில் 473 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

---

## யுனைற்றட் என்ஜினியர்ஸ் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்

பயிற்சி நெறி:
**றேடியோ, ரி. வி. சேர்விஸிங்**
**6 மாதங்கள் (பயிற்சிகளுடன்)**

பயிற்சி நெறியின் உள்ளடக்கமானது:

★ றேடியோ. ரி. வி., டெக் ஆகியவை இயங்கும் முறைகள், அவற்றின் பழுதுகளின் பராமரிப்பு விளக்கங்கள்.

★ சகல இலத்திரனியல் சாதனங்கள் 'எப்படி இயங்குகின்றன' 'How it Works' என்ற அடிப்படையிலான விளக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டது.

★ மிக விரைவில் ஆரம்பம் ★

271, 277, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (19087)

---

## கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.
புதிய பிரிவு:
**A/L 93**

பொருளியல் — வரதராஜன்
வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
அளவையியல் — S. S மனோகரன்
கணக்கியல் — சௌந்தி
தமிழ் — புலவர் சிவா
இந்துநாகரிகம் — திருநாவுக்கரசு
புவியியல் — தர்மராஜா
தூய / பிரயோக கணிதம் — ஈசன்
தாவரவியல் — செல்வநேசன்

மு. குறிப்பு:
பிரிவு I இல் பதிவு செய்தவர்கள் 4-1-1992 இல் வரவும்.
ஆரம்பம்: 21-12-1991 1 மணி.
(சி/1204)

---

## Personal New Science Centre

எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

93 A/L புதிய பிரிவு
ஆரம்பம்:
21—12—1991
8 30 a m

PHY:- சௌந்தி B. Sc. (Hons)
CHE:- செல்வா B Sc. (Hons)
ZOO:- ஈஸ்வரதாசன் B Sc. (Cey)
BOT;- பாலசுப்பிரமணியம்
PURE / APP. } குணசிங்கம் - B. Sc (Hons)

93 A/L
பிரிவு 1க்குரிய வகுப்புகள்
21 - 12 - 1991
முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
(சி-1084)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்,
(கலை, வர்த்தக வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**A/L 93** கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்:
21 - 12 - 1991
(காலை 8-00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. சுப்பிரமணியம் |
| இ. நாகரிகம் / இ. சமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு குணராசா |
| அரசியல் | — | திரு. சிலன் |
| வரலாறு | — | திரு. விஜயன் |

முக்கிய குறிப்பு:
i. அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும்.
ii. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
iii. 93 ஆம் ஆண்டுக்கான DAY CLASSES ஆரம்பமாகிவிட்டன.
(சி-1086)

---

## A/L 93

(விஞ்ஞான பாடங்கள்)
ஆரம்பம்:
21 - 12 - 1991
(சனிக்கிழமை)
New Master Institute
JAFFNA.
(சி/1097)

---

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.

**AL - 93**
கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
ஆரம்பம்:
21 - 12 - 1991
(சனிக்கிழமை)

**பிரிவு - 2**

பொருளியல் — உதயன்
கணக்கியல் — ஸ்ரீ
வர்த். நிதியும் — தேவா
அளவையியல் — S S மனோகரன்
புவியியல் — வேலா
தமிழ் — குழந்தை
இந்து நாகரிகம் — சோதிலிங்கம்
அரசியல் — நவம்
வரலாறு — பிள்ளை
- நிர்வாகி.
(சி-1077)

---

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கந்தையா சுவாமியார்
அவர்களை நினைவு கூருகிறோம்.
க. இராமானந்தசிவம்
திருநெல்வேலி.
(19075)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 16-01-1937
●
மறைவு: 21-11-1991

அமரர் தம்பையா கதிரவேலு
(முன்னாள் அதிபர், கோப்பாய் மகா வித்தியாலயம்)

''பாசமிகு நேசமிகு மறைவதில்லை
வர்ணத்தின் விரிசல்கள் விழுவதில்லை''

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

---

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## 1992-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி கேள்விகள் சார்பாக எமது 20-11 91 ஆம் திகதி கேள்வி விளம்பரம் தொடர்பாக, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டணம், பண்டத்தரிப்பு பட்டணம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், வளவு குத்தகைகள் ஆகியவற்றுக்கான சீல் வைத்த கேள்விகள் 23-12 91 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் பிரதேச சபையின் உரிய உப அலுவலகங்களில் கேள்வி வைப்புப் பணத்தினையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் 23-12-91 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரையும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச சபை அலுவலகம்,
நகர மண்டபம்,
மானிப்பாய். 17-12-1991.

க. கனகரெத்தினம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை.

### அட்டவணை

| குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டணம்** | | | | |
| 1. ஆட்டிறைச் கடை (சந்தை) | 200/- | 500/- | 100/- | 30, 000/- |
| 2. மாட்டிறைச்சிக் கடை (சந்தை) | 200/- | 500/- | 100/- | 100 000/- |
| 3. கட்டுடைச் சந்தை | | 300/- | 100/- | 1, 500/- |
| 4. மானிப்பாய் மத்திய சந்தை | | 500/- | 100/- | 100, 000/- |
| **பண்டத்தரிப்பு பட்டணம்** | | | | |
| 1. பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | | 500/- | 100/- | 400, 000/- |
| 2 மாட்டிறைச்சிக் கடை | 100/- | 500/- | 100/- | 100, 000/- |
| **மானிப்பாய் கிராமம்** | | | | |
| 1. சாவற்காட்டுச் சந்தை ஆனைக்கோட்டை | | 300/- | 100/- | 6, 000/- |
| 2. பிரசாத் சந்தை நவாலி | | 300/- | 100/- | 30, 000/- |
| 3. மாட்டிறைச்சிக் கடை பிரசாத் சந்தை | 30/- | 500/- | 100/- | 35, 000/- |
| 4. ஆட்டிறைச்சிக் கடை சாவற்காட்டுச் சந்தை | 50/- | 300/- | 100/- | 5, 000/- |
| 5. அலுவலக வளவு குத்தகை | | 100/- | 100/- | 3, 000/- |
| **பண்டத்தரிப்பு கிராமம்:** | | | | |
| 1. மாதகல் சந்தை | | 300/- | 100/- | 25, 000/- |
| 2. விளான் சந்தை | | 300/- | 100/- | 6, 000/- |
| 3. இளவாலைச் சந்தை | | 300/- | 100/- | 10, 000/- |
| 4. மாட்டிறைச்சிக் கடை இளவாலை | 50 - | 500/- | 100/- | 50, 000/- |
| 5. அலுவலக வளவு குத்தகை | | 100/- | 100/- | 1, 000/- |

(C/1137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



## அருள்திரு நாகநாதர் கதிரவேலு

பூலோகத்தில் 17-05-1906 பரலோகத்தில் 16-11-1991

அருமை ஐயா,
யேசுவின் வழியிலே அடிவைத்து
சேகவின் போதனையில் விழிவைத்து
உங்கள் ஜீவ ஓட்டத்தை முடித்தீர்கள்
எங்கள் இதயக் கோவிலில்
நீங்கள் எங்கள் காவல் தெய்வம் ஐயா!

மக்கள், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள்

52/2, கண்டி வீதி,
சண்டுக்குளி.

(C/1136)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பொன்னையா

(Ford Rhodes, Thornton & Co)
(யாழ். கிளை முகாமையாளர்)

சுழிபுரம் மத்தியை பிறப்பிடமாக கொண்டவரும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா பொன்னையா 19-12-91 இல் காலமானார். அன்னார் சிவமணியின் கணவரும் பிரேம்குமாரின் தந்தையாரும், நடராசா (பென்சனியர்), தங்கரத்தினம், இராசம்மா, காலம்சென்ற குணரத்தினம் (குணம்), ஞானாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிரேம்குமார் [மகன்]

கோப்பாய், தெற்கு
கோப்பாய்

(18958)

## பிரம்மஸ்ரீ சின்னச்சாமி சர்மா சோமாஸ்கந்தசர்மா

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சி. சோமஸ்கந்தசர்மா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னச்சாமி சர்மா இந்திராட்சி அம்மா ஆகியோரின் அன்பு மகனும், பாலசண்முகக்குருக்கள் (சிரவி நாகம்மாள் தேவஸ்தான பிரதம குரு) சி. பத்மநாபன் (முகுந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரது அரசடி விநாயகர் வீதி கட்டுடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்லி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
பிரம்மஸ்ரீ இ. பாலசண்முகக்குருக்கள்

அரசடி விநாயகர் வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

(18960)

## திருமதி சீமாம்பிள்ளை மேரி யோசேப்பின்

(முன்னாள் தும்பளை புனித மரியன்னை, புனித லூர்து அன்னை ஆலயங்களின் பராமரிப்பாளர்)

திருமதி சீமாம்பிள்ளை மேரி ஜோசேப்பின் அவர்கள் 19-12-1991 இல் காலமானார்.

இவர் தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற திரு. சீமாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் உப அதிபராகிய திரு. சீ. அந்தோனிமுத்து, திருமதி மரியம்மா ஜோன்யோசேப் [லண்டன்] ஆகியோரின் அன்பு தாயாரும், திரு. யோண்ஜோசேப், திருமதி லூர்துமேரி அந்தோனிமுத்து ஆகியோரின் அன்பு மாமியாரும், மேசேஸ் தேவரட்ணம், ஈட்விஸ் சாந்தினி, பிலிப்ஸ் விஜயரட்ணம், யூட் யேசுநேசன் [லண்டன்], மாகிறேற் மரிலின் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 20-12-91 [வெள்ளி] மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்!
சீ. அந்தோனிமுத்து

புனிதலூர்துமாதாகோவிலடி,
தும்பளை, பருத்தித்துறை

(18961)

---

சங்கானை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)
லொறி என்ஜின் திருத்தம் செய்வதற்கான

## கேள்வி விண்ணப்பம்

சங்கானை சங்க லொறி 28/9142 என்ஜினுக்கு உபஉறுப்புகள் போட்டு சங்கத்தில் வைத்து திருத்தம் செய்ய, திருத்தக் கூலிக்கு கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. கேள்வி விண்ணப்பம் அனுப்ப விரும்புவோர், இந்த லொறியின் என்ஜின் திருத்த என்ன கூலி தேவை எனக் குறிப்பிட்டு "தலைவர், சங்கானை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை" என்ற விலாசத்திற்கு 31-12-1991க்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். லொறியைப் பார்வையிட விரும்புவோர் காரியாலய நேரம் காலை 8-00—5-00 மணி வரை பார்வையிடலாம்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

19-12-1991. (இ/1214)

---

பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. சங்கம், பளை
பயிலுனர் கிளை - முகாமையாளர்கள் தேவை

மேற்படி சங்கத்தின் எல்லைக்குள் வசிப்பவர்களிலிருந்து கீழ்வரும் தகுதிகளுடன் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. வயது: 18 — 40 வரை
2. கல்வித்தகைமை: க. பொ. த. (சாதாரண) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
3. சேவைக் காலத்தில் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு அனுமதித்த சம்பளம் வழங்கப்படும்.
4. விண்ணப்பங்கள் யாவும்-

தலைவர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,

என விலாசமிடப்பட்டு 26-12-1991 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச் செய்யவும்.

எஸ். கார்த்திகேசு
பொது முகாமையாளர்,

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம்,
பளை; 16-12-91

(இ-1135)

---

உள்ளூரில்
உற்பத்தி
விடுதலைக்கு
உயிர்நாடி.

---

# C. C. A.

யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கருகாமை)

புவியியல்
வேலாயுதபிள்ளை

**A/L 92, 93**
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
**21-12-1991**

(சி/1206)

---

புதிய
உயர் கல்லூரி
NEW COLLEGE OF HIGH STUDIES

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 93**
ஆரம்பம்:
21-12-1991
காலை 7 மணி

**A/L 92**
வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

**A/L 91, 92,**
**DAY CLASSES**
நடைபெறுகின்றன.

நிர்வாகி.

---

# NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

92 ஆம் ஆண்டுக்கான Year 10, 11
கணிதம்
திரு. சங்கர்

Year 10 Sat., Sun.- 3.00 P. m.
Year 11 Sat., Sun.- 4.00 P. m.

ஆரம்பம்: 21-12-199[illegible]

(இ/1094)

---

# NEW SCIENCE HALL

கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## 93 - A/L
## புதிய பிரிவு

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. சோதிலிங்கம்<br>திரு. கணேசன் |
| இரசாயனவியல் | திரு. சலீம்<br>திரு. மணியம் |
| தாவரவியல் | திரு. குணசீலன் |
| விலங்கியல் | திரு. தம்பிராஜா<br>திரு. ஈஸ்வரதாசன் |
| தூய/பிரயோக கணிதம் | திரு. வெக்டர்<br>திரு. சந்திரமோகன் |

ஆரம்பம்:- 21-12-1991

குறிப்பு:- இடைநிறுத்தி வைக்கப்பட்ட 93 A/L வகுப்புக்கள் மீண்டும் 21-12-1991 முதல் ஆரம்பமாகின்றன.

(இ-1203)

---

# யூனிவேர்சல்

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

1992 ஆம் ஆண்டிற்கான மாணவர்களை
சேர்த்தல் பற்றிய

## அறிவுறுத்தல்கள்

1) 5, 6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான
**புதிய பிரிவுகள் யாவும்**
**05-01-1992 ஞாயிறு ஆரம்பமாகின்றன**

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்களை மட்டுமே அனுமதிக்க முடியுமாதலால் மாணவர்கள் தங்கள் அனுமதியை முன்கூட்டியே உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்குறிப்பிட்ட நேரத்தில் எமது நிலையத்தில் சமூகமளித்து தமது அனுமதியை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

| ஆண்டு | காலம் | நேரம் |
|---|---|---|
| 5 | 23-12-1991 | காலை 7-30 மணி |
| 6 | 23-12-1991 | காலை 8-30 மணி |
| 7 | 23-12-1991 | மு. ப. 9-30 மணி |
| 8 | 23-12-1991 | மு. ப. 10-30 மணி |
| 9 | 23-12-1991 | மு. ப. 11-30 மணி |
| 10 | 23-12-1991 | பி. ப. 2-30 மணி |
| 11 | 23-12-1991 | பி. ப. 3-30 மணி |

வகுப்புக்கள் யாவும் மாணவர்களின் பாடத்திற்கு ஏற்ப வெவ்வேறு பிரிவுகளாக நடத்தப்படும். நேர சூசிகைகள் 23-12-1991 அன்று வழங்கப்படும்.

2) க. பொ. த. உயர்தரம் 93ஆம் ஆண்டிற்கான கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகள்

| | | |
|---|---|---|
| புதிய வகுப்புக்கள் யாவும் | 21-12-91 [சனி] | ஆரம்பமாகும். |
| கலை, வர்த்தகப் பிரிவு | 21-12-91 | காலை 6-15 மணி |
| விஞ்ஞானப் பிரிவு (கணிதம், உயிரியல்) | 21-12-91 | பி.பகல் 2-30 மணி |

அதிபர்,
யூனிவேர்சல்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-12-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org